Arima Nokku

# அரிமா நோக்கு

8 : 3 அக்டோபர் 2014

ரூ.30

ISSN 2320-4842

ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

ISSN 2320-4842

அரிமா
நோக்கு
8 : 3 அக்டோபர் 2014

சொற்களின் பிற்புலம்
- வ. ஜெயதேவன் 03
தொல்காப்பியச் செம்பதிப்பு
- செ. வை. சண்முகம் 05
What is a Poem?
- *Mark Yakich* 15
சீனநாட்டுச் சிவாலயத்தில் தமிழ்க் கல்வெட்டு
- என். நடராசப்பிள்ளை 18
தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம்: இடைச்சொற்கள்
- ஜா. கீதா 21
அகமரபுகளும் பெருங்கதையும்
- செ. விஜயலட்சுமி 28
ஆற்றுப்படை இலக்கியமும் பாடுபொருளும் - ஐ. அமுதா 30
சொன்மையும் பொருண்மையும்
- செ. சாரதாம்பாள் 32
அய்ரோப்பியர் செய்த தமிழ் இலக்கணங்கள்
- மு. வையாபுரி 38
சிறுகதைகளில் இராமாயண வாழ்வியல் கூறுகள்
- கி. கௌரி & பரமசிவம் முத்துசாமி 41
தமிழ்மொழி - கருத்தாடல்
- கணேசன் சுப்பிரமணியன் & பரமசிவம் முத்துசாமி 45
நாதஸ்வரம் தொடர் நாடகத்தில் மொழியணிகள்
- சுப்பிரமணியம் கிருஷ்ணன் & பரமசிவம் முத்துசாமி 50
அருட்குரு அச்சுததாசரின் பாடலிசை - இரா. சிவராமன் 52
பேயாழ்வார் பாடல்கள்: கட்டமைப்பும் கருத்துக்களும்
- பழ. முத்துவீரப்பன் 59
பாலகுமாரன் எழுத்து: அறிமுகம்
- முருகேசன் 62

## தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

# தூய்மை காப்போம்

பெருக்குதல், குப்பைகளை உருவாக்குதல், பெருக்குதல், குவித்தல். பரவலாக்குதல் என்பன நம் நாட்டில் ஒரு தேசிய நடவடிக்கையாக நடந்து வருதையும் அவற்றோடு நாம் வாழப் பழகிவிட்டதையும் இணைத்துப் பார்த்தால் குப்பைக் கலாச்சாரம் என்பதே நம் தேசிய அடையாளமாகி விடுவதை நாம் மறுக்கமுடியாது. இந்நிலையில் *நாட்டைத் தூய்மை செய்வோம்* என்னும் முழக்கம் வரவேற்கத்தக்கதுதான். அரசியல், கட்சிகள், மதங்கள், இனங்கள் சாதிகள், மொழிகள் என்கிற வேறுபாடுகள் இல்லாத இவ்வாசகக் கோவையை நிறைவேற்ற எவரும் எதிர்ப்புத் தெரிவிக்க வாய்ப் பில்லை.

அயல்நாடுகளுக்கு, குறிப்பாக-வளர்ந்த, வளர்ந்துவரும் நாடுகளுக்குப் போய் வரும் எவருக்கும் அங்குத் தென்படாக் குப்பைகூளங்கள், எச்சில், சளிச் சிந்தல்கள், உணவுக் கழிவுகள் நம் நாட்டில் அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்க் காட்சிதரக் கண்டு, வெட்கமும் வேதனையும் சீற்றமும் பொங்கிக் குமுறுவது நியாயமே. காடுகள் கழனிகள், ஆறுகள், குளங்கள், மலைகள் என்று ஒன்று விடாமல் எல்லாவற்றையும் கெடுத்துவைத்தோம். கோவில்கள், தெருக்கள், பள்ளிகள், அலுவலகங்கள், மனைத் தொகுப்புக்கள், மருத்துவ மனைகள் எங்கெங்கும் வெறுக்கத்தக்க குப்பைமேடுகள். ஈக்கள், கொசுக்கள் - மரணமுகவர்களாக நோய்களின் தூதர் களாக ஓய்வறா இயக்கத்தில்.

அரசு, சமூகம், குடும்பம், பொதுநலக் குழாம்கள் என இதுகுறித்து அக்கறை காட்டவேண்டிய முகாமைகள் பல இருக்கின்றன. கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, பொருளாதார, வாழ்வாதார மேம்பாடுகள், சாதி மதச் சழக்கற்ற சம நிலைச் சமூக அமைப்பு எல்லாவற்றிலும் முகம்கொடுத்து முன்னேற மாட்டாத நாட்டில் தூய்மை காப்போம் என்று துடைப்பம் தூக்கினால் போதுமா?

ஊர் ஓரங்களில் தூக்கி எரியப்பட்டு, எவ்வித வசதியும் அற்ற சேரிகளில், பன்றிகளோடும் நாய்களோடும் பூச்சிகளோடும் புழுக்களோடும் வாழ்வைப் பகிர்ந்துகொண்டு நோய்களின் வளர்ப்பு மக்களாகக் கிடக்கும் கோடிக் கணக்கான இந்தியக் குடிமக்களுக்கு, ஊரின் நடுவில் வாழும் உரிமை, தூய்மையான காற்றும் நீரும் பெறும் உரிமை, பசிக்கு உணவு பெறும் உரிமை, அவர்கள் குழந்தைகளுக்குக் கல்வி வேலைவாய்ப்பு உரிமை எல்லாம் மறுக்கப்பட்ட நிலையில், அரசியல் அநியாயங்களால் மூச்சிறுக்கப் பட்ட நிலையில்-கையில் துடைப்பம் தூக்கினால் போதுமா? எப்போது சேரிகள் இல்லையாகும்? எப்போது மக்கள் அனைவருக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், தரமான உணவு, தங்கி வாழத் தகுதியான குடியிருப்புக் கிடைக்கும்? கல்வி வேலைவாய்ப்பு மருத்துவ வசதி பொருத்தமான பொழுதுபோக்கு வாய்ப்புக்கள் எப்போது உறுதிசெய்யப்படும்? இவையெல்லாம் செய்து முடிப்பது முதல் வேலை.

அதன் பிறகு, குப்பையைத் தெருவில் போட்டால் போட்டவனையே கூட்டி யெடுக்கச் சொல்லலாம். தெருவில் எச்சில் துப்பியவனையே துடைக்கச் சொல்லலாம். அங்கங்கு நவீன முறையில் கட்டிவைக்கப்பட்டுள்ள கழிவறைகள் இருந்தும் தெருவைத் திறந்தவெளியைப் பயன்படுத்தினால் - அப்படிப்

ISSN 2320-4842

பட்டவன் கைகளிலிலேயே நீர் நிரம்பிய வாளியை, துடைப்பத்தை, கிருமி கொல்லியைக் கொடுத்துத் தூய்மைப்பணியைச் செய்யச் சொல்லலாம்.

*நாட்டைத் தூய்மை செய்வோம்* என்னும் முழக்கம் வரவேற்கத்தக்கதுதான்-அதன் உள்ளடக்கத்தைப் பன்முகப்பரிமாணம் உடையதாக்கும் பார்வையோடு சொல்லும்போதும் செயற்படுத்தும்போதும்.

*ஆசிரியர்*
ஈரோடு தமிழன்பன்
*இணையாசிரியர்*
*(மதிப்புறு நிலை)*
வ. ஜெயதேவன்
*ஆசிரியர் குழு*
சிலம்பொலி சு. செல்லப்பன்
கா. செல்லப்பன்
இரா. இளவரசு
நா. கணேசன் (அமெரிக்கா)
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
நா. முத்துக்குமார்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்
மருதூர் அரங்கராசன்
பெ. இலக்குமிநாராயணன்
எஸ். ஏ. சங்கரநாராயணன்
*அறிவுரைக் குழு*
இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்
*பதிப்பாளர்*
இரா. பன்னிருகைவடிவேலன்

## கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 3000/- | US $ 150 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 10,000/- | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் உண்டு.
- புரவலர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 40% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்களுடைய வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் அனுப்பப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

### விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*

**கட்டணம் செலுத்த:**

**DD in favour of *'Nokku'* payable at Chennai**

**Indian Overseas Bank (IFSC Code: IOBA0001681)**

**S.B. A/c No. 168101000006423**

**அரிமா நோக்கு**

4/1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096
வலைத்தளம்: www. arimaanokku.com
மின் அஞ்சல்: arimaanokku@hotmail.com செல்: 9380626448